# தெவிநுவர பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 நவம்பர் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தெவிநுவர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 821,986 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமலும் இனங்காணப்படாமலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பெறுமதி சேர்வரிக்காக சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈடுசெய்யக்கூடிய வரித்தொகை ரூபா 78,362 ஆக இருந்த போதிலும் அதற்காக கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பெறுமதி சேர்வரி வைப்பாக மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் இனங்காணப்பாடது ரூபா 752,711 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 24,684 தொகை கிடைக்க வேண்டிய தொகையாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆதனக் கடன் பெற்றிருந்த சபையின் 09 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 503,089 தொகையான வட்டி கிடைக்க வேண்டிய தொகையாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 160,405 கூட்டுத்தொகையான 08 கணக்கு மீதிகள் இனங்காணப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,718,491 ஆக இருந்த போதிலும் நாட்குறிப்புப் பதிவு இல. 47 இன் பிரகாரம் ரூபா 6,899,274 தொகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையினால் வருமானம் ரூபா 1,819,217 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,255,260 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக் கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் 06 காணி மற்றும் கட்டிடங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,083,458 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மோட்டார் வாகனங்கள் தரிப்பிட வாடகை அறவிடும் ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகையாளரினால் வருடாந்தம் ரூபா 45,000 தொகை செலுத்துவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் வருமானம் மற்றும் செலவினப் பட்டோலைகளின் பிரகாரம் கிடைத்த வருமானம் ரூபா 15,000 மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானமான ரூபா 30,000 கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,031,009 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,663,387 ஆக இருந்தமையால் ரூபா 1,367,622 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 60,027,662 பெறுமதியான மீதிகளுக்காக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், உளமை மற்றும் சபைக்காக பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பட்டோலைகள், முறையாகப் பேணப்பட்ட நிலையான சொத்துப்பதிவேடு, காலப்பகுப்பாய்வுகள், மீதியினை உறுதிப்படுத்தல்கள், வங்கியிலிருந்து பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் போன்றன காணப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 17 | பி.ச.21 படிவத்தின் பிரகாரம் அடியிதழ்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 101 | செலவுகள் மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட சபையின் பிரேரணைகள் மற்றும் அங்கீகாரங்கள் குறிப்பிடாத உறுதிச்சீட்டுக்களுக்காகவும் கொடுப்பனவுகள் |

மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (iii) | விதி 145 | ஒவ்வொரு வகை வைப்புக்களுக்கான பணம் தொடர்பான விபரமான கூற்றொன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | விதி 153 | பிரதேச சபை படிவம் 7 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியபோதிலும் அதன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் நாளாந்தம் செயலாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்க கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| (vi) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளை செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை |

(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 237 | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் இருப்புப் பதிவேட்டிற்கு/ பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தியதற்காக உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 395 | ஊழியர் கடன்களுக்காக பேணப்படுகின்ற 7189778 ஆம் இலக்க வங்கிக் கணக்கு மற்றும் 1246 ஆம் இலக்க வங்கிக் |

கணக்கு என்பவைகளுக்கு மீளாய்வாண்டின் போது வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iii) | நி.பி. 396(ஈ) | 02 நடைமுறைக் கணக்குகளில் 2010 நவம்பர் மாதம் தொடக்கம் வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் பொதுக் கணக்கில் ரூபா 41,663 தொகையான 8 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி. 507 | கையிருப்பு பொருட்களின் பெறுமதி வருடாந்த கணக்குகளில் உட்படுத்துவதற்காக வருட இறுதித் தினத்தில் உள்ளவாறு பௌதீக மெய்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்தக்களின் உளமை பற்றிய கூற்றொன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி. 880 | களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. 07 உத்தியோகத்ர்களினால் தவணை அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூபா 3,850 வைப்புத் தொகையானது கணக்காய்வுத் திகதியான 2011 ஆகஸ்ட் 12 வரையிலும் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,636,260 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,869,122 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த பிழையற்றவை அல்ல என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயங்கள் | நிலுவை வருமானம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|
| | 2010 | 2009 | % |
| | ரூபா.000 | ரூபா.000 | |
| ஆதனவரி | 1,572 | 1,293 | 21.57 |
| ஏக்கர் வரி | 57 | 52 | 9.61 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 103 | 102 | 0.98 |
| வுாடகை | 3,283 | 2,312 | 41.99 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,629,000 தொகையான நிலுவை வாடகை மற்றும் கட்டணம் என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 60,657 இற்கான தண்டப் பணத்தினை சபைக்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து ரூபா 220,740 தொகையும் மாகாண சபையிடமிருந்து ரூபா 4,352,718 தொகையும் என ரூபா 4,573,458 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீடு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீட்டு | உள்ளவா | முரண் | பாதீட்டு | உள்ளவாற | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 20,200 | 16,953 | 3,247 | 16,171 | 15,965 | 206 |
| ஏனையவை | 9,580 | 9,798 | (218) | 6,264 | 8,583 | (2,319) |
| உப கூட்டுத் தொகை | 29,780 | 26,751 | 3,029 | 22,435 | 24,548 | (2,113) |
| மூலதன செலவுகள் | 42,270 | 37,863 | 4,407 | 10,450 | 16,768 | (6,318) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 72,050 | 64,614 | 7,436 | 32,885 | 41,316 | (8,431) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | - |
| இரண்டாம் தரம் | 18 | 19 |
| ஆரம்ப தரம் | 23 | 19 |
| ஏனையவை(அமைய,தற்காலிகம்) | - | 24 |

(ஆ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 16,952,540 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணைாளரிடமிருந்து ரூபா 10,836,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 6,116,540 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 24 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,775,266 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 110,000 பெறுமதியான 04 சொத்து விடயங்கள் எவ்வித பயன்பாடுமின்றி செயற்பாடற்று சபை வளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருட காலத்தை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,451 ஆகக் காணப்பட்டது.

### 2.5.3 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய அறவிடப்பட வேண்டிய நிலுவையாக இருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,230,507 ஆகக் காணப்பட்டது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### வீதி விளக்கு பராமரித்தல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வீதி வளக்கு பரமரித்தல் தொடர்பாக மின்சார உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்கின்ற போது தேவையாதன் பிரகாரம் பரமரிக்கும் மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படயில் அவைகளின் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகள் ஒன்றையொன்று வெவ்வேறாக இனங்காண்பதற்காக இலக்கம் அல்லது குறியீடு முறைமையொன்று உபயோகிக்கப்பட்டு ஒவ்வொரு வீதி விளக்ககளுக்கான மின்குமிழ்கள் மற்றும் ஏறைய உதிரிப்பாகங்கள் என்பவற்றைப் பெருத்தும் போது பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக ரூபா 888,822 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை மின்சார சபையிடமிருந்து ரூபா 53,252 தொகை மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 835,570 தொகையான செலவினம் சபை நிதியத்தில் செலவு அதிகரிப்பினை ஏற்படுத்தியிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளில் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்